# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை
# தமிழ் பாடக்குறிப்புகள்

1. **அன்னைத் தமிழே– பாவலரேறு பெருஞ்சித்திரனார்**

பாவலரேறு பெருஞ்சித்திரனாரின் இயற்பெயர் துரைமாணிக்கம். இவர் நடத்திய இதழ்கள் தென்மொழி தமிழ்ச்சிட்டு என்ற இதழ்களின் வாயிலாக தமிழுணர்வை பரப்பியவர். இவர் இயற்றிய நூல்கள்: உலகியல் நூறு, நூறாசிரியம், கனிச்சாறு, எண்சுவை எண்பது, மகபுகுவஞ்சி, பள்ளிப்பறவைகள், கொய்யாக்கனி மற்றும் இவரியற்றிய "திருக்குறள் மெய்ப்பொருளுரை" தமிழ் கருவுலமாய் விளங்குகிறது.

"சாகும் போது தமிழ்ப் படித்தே சாக வேண்டும் –என்றன்
சாம்பலிலும் தமிழ் மணமே வீச வேண்டும் என்றவர் க.சச்சிதானந்தன்
"பாப்பத்தே" என்பது பத்துப்பாட்டு இ எண்தொகை என்பது எட்டுத்தொகை
நற்கணக்கே என்பது பதினென்கீழ்க்கணக்கு

**முக்கியப் பாடலடிகள்**
அன்னைத் தமிழே அழகார்ந்த செந்தமிழே முந்துற்றோம் யாண்டும் முழங்கசுத் தனித்தமிழே (கனிச்சாறு தொகுதி –2 இல் இப்பாடல் இடம்பெற்றுள்ளது )

2. **காற்றே வா – பாரதியார் (வசன கவிதை)**

நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலா, சிந்துக் தந்தை, பாட்டுக்கொரு புலவன் என போற்றப்பட்டவர் பாரதியார். எட்டயபுர ஏந்தல் எனப்பட்டார். கேலிச்சித்திரம்– கருத்துப்படம் உருவாக்கியவர். குயில்பாட்டு, பாஞ்சாலிசபதம், கண்ணன் பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி, இயற்றியவர். இவர் நடத்திய இதழ்கள் சுதேசமித்திரன், இந்தியா இவ்விதழ்களின் ஆசிரியராகப் பணியாற்றினார். தமிழில் வசன கவிதையைத் தோற்றுவித்தவர். இது பிற்கால புதுக்கவிதைக்கு அடித்தளமாக இருந்தது.

**சொல்லும் பொருளும்**
மயலுறுத்து–மயங்கச்செய், ப்ராணரஸம் – உயிர்வழி, லயத்துடன்–சீராக

**முக்கிய பாடல் வரிகள்:**
"காற்றே வா மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு மயலுறுத்தகின்ற இனிய வாசனையுடன் வா"

3. **முல்லைப் பாட்டு –நப்பூதனார்**

பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று முல்லைப்பாட்டு. அடி வரையறை 103. பத்துப்பாட்டு நூல்களில் அடி எண்ணிக்கையில் குறைந்தது முல்லைப்பாட்டு, ஆசிரியப்பாவால் ஆனது. இதற்கு மற்றொரு பெயர் நெஞ்சாற்றுப் படை. முல்லை

நிலத்தை பாடுபொருளாகக் கொண்டது. இப்பாட்டில் 1முதல் 17 அடிகள் பாடப்பகுதியாக உள்ளது. விருச்சி என்பது நற்சொல் கேட்டல் (சகுனம்)

**அருஞ்சொற்பொருள்:**

நனந்தலை–அகன்ற உலகம், நேமி–வலம்புரிச்சங்கு, கோடு–மலை, கொடுஞ்செலவு–விரைவாகச் செல்லுதல், நறுவீ–நறுமணமுடைய மலர்கள், துர்உய்–தூவி, விரிச்சி–நற்சொல், சுவல்–தோள்

**முக்கிய பாடலடிகள்**

பாடுஇமிழ் பனிக்கடல் பருகி– கடல்நீர் பருகிய மேகம் – அறிவியல் சிந்தனை,
நிமர்ந்த மாஅல் போல– உவமை அணி, வளைஇ–சொல்லிசையளடை,
அலரிதூஉய்–செய்யுளிசைஅளபெடை

**4. காசிக்காண்டம்–அதிவீரராம பாண்டியன்**

காசி நகரப் பெருமைகளைக் கூறுகிறது. இல்லொழுக்கம் என்ற தலைப்பில் உள்ள 17 வது பாடல் விருந்தினர் உபசரிப்பு பற்றி உரைக்கிறது. அதிவீரராம பாண்டியர் அரசராகவும் புலவராகவும் திகழ்ந்தவர். கொற்கையை ஆண்டதால் 'கொற்கையாளி' மற்றும் சீவலமாறன் என அழைக்கப்பட்டார். இவர் இயற்றிய நூல்கள் காசிக்காண்டம், வெற்றிவேட்கை (நறுந்தொகை), நைடதம் (இலக்கண நூல்), லிங்கபுராணம், வாயுசம் கிதை, திருக்கருவை அந்ததாதி (குட்டித் திருவாசகம்), கூர்மபுராணம் போன்றவையாகும்.

**முக்கிய பாடலடிகள்**

"முப்பழமொடு பால் அன்னம் முகம் கடுத்து இடுவாராயின் கப்பிய பசியினோடு கடும்பசி ஆகும் தானே"–விவேக சிந்தாமணி

வியத்தல் நன்மொழி இனிது உரைத்தல் –காசிக்காண்டம்

**5. மலைபடுகடாம்–(கூத்தராற்றுப்படை–பெருங்கௌசிகனார்–நன்னன்சேய் நன்னன்)**

பத்துப்பாட்டு நூல்களுள்; ஒன்று மலைபடுகடாம் மலைக்கு யானையை உவமித்து மலையில் உண்டாகும் ஓசைகளை கடாம் என்று சிறப்பித்தமையால் இந்நூல் மலைபடுகடாம் எனப் பெயர் பெற்றது. கடாம்–யானையின் வாயில் இருந்து ஒழுகும் நீர் என்று பொருள். அடி வரையறை –583. கூத்தன் பிற கூத்தர்களை ஆற்றுப்படுத்துவதால் கூத்தராற்றுப்படை எனப்படுகிறது.இந்நூலின் பாட்டுடைத் தலைவன் நன்னன். பாடியவர் இரணிய முட்டத்து பெருங்குன்றூர் பெருங்கௌசிகனார்.

ஆற்றுப்படை என்பது பரிசில் பெற்ற புலவன் பரிசில் பெற வள்ளலை நாடிப் போகும் புலவனை இவரிடம் சென்றால் நீ அதிக பரிசில் பெற்றால் என ஆற்றுப்படுத்துவது (வழிப்படுத்துதல்) ஆற்றுப்படையாகும்.

**அருஞ்சொற்பொருள்:**

1.அல்–இரவு 2.கழை–முங்கில் 3.அலங்கு–அசையும்

**முக்கியப் பாடலடிகள்**

நும் இல் போல நில்லாது புக்கு, கிழவிர் போலக் கேளாது கெழீஇ
புரூஉக்குறை பொழிந்த நெய்கண் வேலையொடு
குரூஉக்கண் இறடி பொம்மல் பெறுகுவீர் (அடி158–169)

**6. பரிபாடல் – (அகம்–புறம் சார்ந்த நூல்)**

பரிபாடல் என்பது எட்டுத் தொகை நூல்களுள் ஒன்று. ஊழி குறித்த பாடலை எழுதியவர் கீரந்தையார். இந்நூல் ஒங்கு பரிபாடல் என அடைமொழியுடன் அழைக்கப்படுகிறது.

பண்ணோடு பாடப்பட்ட நூல் (பா வகை–பரிபாட்டு)

மொத்தப்பாடல்கள்–70, கிடைத்தவை–24

அண்டம் உருவாதல் பற்றி பாடல் இடம் பெற்ற நூல்கள்: பரிபாடல், திருவாசகம்

**பாடலடிகள்:**

விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்
உள்ளீடு ஆகிய இருநிலத்து

ஊழியும் பால்வீதிகள் அண்டத்தில் அதிகம் உள்ளன எனக் கண்டறிந்தவர்–எட்வின் ஹப்பில் –1924 (அமெரிக்கர்).

**7. நீதி வெண்பா – கா.ப.செய்குதம்பிப் பாவலர்**

சதாவதானி–செய்குதம்பிப் பாவலர். கன்னியாகுமரி மாவட்டத்தில் இடலாக்குடி எனும் ஊரில் 1874இல் பிறந்தார். 1907 மார்ச் 10 ஆம் நாளில் விக்டோரிய அரங்கத்தில் ஒரே நேரத்தில்; நூறு செயல்கள் செய்து சதாவதானி பட்டம் பெற்றார். 15 வயதிலேயே கவிதை எழுதும் திறன் பெற்றவர். சீறாப்புராணத்திற்கு உரை எழுதியவர். இவர் நினைவாக இடலாக்குடியில் மணிமண்டபம் உள்ளது.

**முக்கிய பாடலடிகள்**

அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளைப் அகற்றி மதிக்கும் தெருளை
--------------------------------
பொருத்துவதும் கல்வியென்றே போற்று

**8. திருவிளையாடற் புராணம்– பரஞ்சோதிமுனிவர் (திரு ஆலவாய்க் காண்டம்)**

திருவிளையாடற் புராணத்தை எழுதியவர் பரஞ்சோதி முனிவர் திருமறைக்காட்டில் பிறந்தவர். காலம் கிபி 17 ஆம் நூற்றாண்டு. இவர் இயற்றிய நூலகள் வேதாரண்ய புராணம், திருவிளையாடல் போற்றிக் கலிவெண்பா, மதுரைப் பதிற்றுப்பத்தந்தாதி போன்றன. திருவிளையாடற் புராணம் 3 காண்டங்களைக் கொண்டது. காண்டம் என்பது நூலின் பெரும்பிரிவு.

1. மதுரை காண்டம்
2. கூடற்காண்டம்
3. திருஆலவாய் காண்டம்

இடைக்காடனாரின் பாடலை குசேல பாண்டியன் கேட்காததால் மனம் நொந்து சிவனிடம் முறையிடுகிறார். இதை அறிந்த சிவபெருமான் கடம்ப வனத்தை விட்டுநீங்குகிறார்.தன் தவற்றை உணர்ந்த பாண்டியன் இறைவனிடம் மன்னிப்புக்கோரி இடைக்காடனாரை அழைத்து மரியாதை செய்கின்றான். இறைவனும் மீள கடம்பவனத்திற்கு எழுந்தருளுகின்றார்.

**9. பூத்தொடுத்தல் – உமா மகேஸ்வரி**

கவிஞர் உமா மகேஸ்வரி மதுரை மாவட்டத்தில் பிறந்தவர். தற்போது ஆண்டிபட்டியில் வசிக்கின்றார். இவரியற்றிய நூல்கள் நட்சத்திரங்கள் நடுவே, வெறும் பொழுது, கற்பாவை உள்ளிட்ட கவிதைத் தொகுதிகள்.

**பாடலடிகள்**

இந்தப் பூவை எப்படி தொடுப்பது
வாசலில் மரணம் நிற்பதறிந்தும்
வருந்தாமல் சிரிக்கும் இந்தப் பூவை...
……………………………………
என் மனமே நூலாகும்
நுண்மையுற்றாலொழிய

**10. முத்துக்குமாரசாமி பிள்ளைத் தமிழ்–குமரகுருபரர்**

பிள்ளைத்தமிழ் இலக்கணம் : 96 வகை சிற்றிலக்கியங்களுள் ஒன்று பிள்ளைத்தமிழ். கடவுளையோ, தலைவரையோ, அரசனையோ பாட்டுடைத் தலைவராகக் கொண்டு, அவரைக் குழந்தையாகக் கருதி 10 பருவங்கள் அமைத்துப் பாடுவது பிள்ளைத் தமிழாகும்.

பிள்ளைத்தமிழ் 2 வகைப்படும்.

1. ஆண்பாற் பிள்ளைத் தமிழ்
2. பெண்பாற் பிள்ளைத் தமிழ்

பிள்ளைத் தமிழுக்குரிய பருவங்கள் 10

ஆண்பாற்பிள்ளைத் தமிழ்:

1.காப்பு 2.செங்கீரை 3.தால் 4.சாப்பாணி 5.முத்தம் 6.வருகை. 7.அம்புலி 8.சிற்றில் 9.சிறுபறை 10 சிறுதேர்

பெண்பாற்பிள்ளைத் தமிழ்

1.காப்பு 2.செங்கீரை 3.தால் 4.சாப்பாணி 5.முத்தம் 6.வருகை. 7.அம்புலி 8.கழங்கு 9.அம்மானை 10 ஊசல்

**குமரகுருபரர்**

காலம் கி.பி.17 ஆம் நூற்றாண்டு.தமிழ்,வடமொழி,இந்துஸ்தானி மொழிகளில் புலமைமிக்கவர். இயற்றிய நூல்கள்: கந்தர்கலிவெண்பா, மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக்கலம்பகம், சகலகலா வல்லிமாலை, நீதிநெறிவிளக்கம், திருவாரூர் மும்மணிக்கோவை முதலான நூல்கள்.

**முக்கியப் பாடலடிகள்**

பாட்டுடைத் தலைவன் முருகன். செங்கீரை பருவம் பாடப்பட்டுள்ளது. செங்கீரை என்பது செங்கீரை செடி ஆடுவது போல குழந்தை 5–6 ஆம் மாதத்தில் தன் இருகை ஊன்றி எழுந்து ஒருகால் மடக்கி ஒருகால் நீட்டி முன் பின் ஆடுவது செங்கீரையாகும்.

"செம்பொ னடிச்சிறு கிங் கிணியோடு சிலம்பு கலந்தாட"

**11. கம்பராமாயணம்–கம்பர்**

கம்பராமாயணத்ததை எழுதியவர் கம்பர். கம்பர் கம்பராமாயணத்திற்கு இட்ட பெயர் இராமாவதாரம் என்பதாகும். வால்மீகு வடமொழியில்; எழுதிய இராமாயணத்தை தழுவி கம்பர் கம்பராமாயணம் எழுதினார். இது ஒரு வழிநூலாகும். கம்பராமாயணம் ஆறு காண்டங்களைக் கொண்டது.

| | | |
|---|---|---|
| 1.பால காண்டம் | 2.அயோத்தியா காண்டம் | 3.ஆரண்ய காண்டம் |
| 4.கிட்கிந்தா காண்டம் | 5.சுந்தர காண்டம் | 6.யுத்த காண்டம் |

**கம்பரின் சிறப்புகள்**

கல்வியில் பெரியவன் கம்பன், கம்பன் வீட்டுக் கட்டுத் தறியும் கவிபாடும், விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர்க்கம்பன் என புகழப்படுபவர். கம்பர் சோழ நாட்டில் உள்ள திருவழுந்தூரில் பிறந்தார். இவரை ஆதரித்த வள்ளல் திருவெண்ணெய் நல்லூhர் சடையப்ப வள்ளல். இயற்றிய நூல்கள் சரஸ்வதி அந்தாதி, சடகோபரந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது, சிலையெழுபது என்பதாகும்.

**முக்கியப் பாடலடிகள்**

1.தாதுகு சோலைதோறுஞ் சண்பகக் காடுதோறும்– பாலகாண்டம் –ஆற்றுப்படலம்

2.தண்டலை மயில்களாட தாமரை விளக்கந் தாங்க–பாலகாண்டம்–ஆற்றுப்படலம்

3.வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்–பாலகாண்டம் –நாட்டுப்படலம்

4.வெய்யோன் ஒளி தன் மேனியில் விரிசோதியில மறைய– அயோத்தியாகாண்டம்–கங்கை படலம்

5.ஆழ நெடுந்திரை ஆறு கடந்து இவர் போவாரோ

--------------------

தோழமை என்று அவர் சொல்லிய சொல் ஒரு சொல் அன்றோ ..

6. உறங்கின்ற கும்பகன்னா உங்கள் மாய வாழ்வெலாம் ....(வல்லைப்பாட்டு)

**12. ஏர் புதிதா (கு.ப.ராஜகோபலன்)**

கு.ப.இராஜகோபாலன் 1902 இல் கும்பகோணத்தில் பிறந்தவர். மிகச் சிறந்த சிறுகதை ஆசிரியர். கவிஞர், நாடக ஆசிரியர், மறுமலர்ச்சி எழுத்தாளர் என பன்முகம் கொண்டவர். இவர் நடத்திய இதழ்கள் தமிழ்நாடு, பாரதமணி, பாரத தேவி, கிராம ஊழியன்

ஆகிய இதழ்களில் ஆசிரியர். இவர் படைப்புகளுள் நாட்டுடமையாக்கப்பட்டவை அகலிகை, ஆத்ம சிந்தனை ஆகியன நூல்களாக தொகுக்கப்பட்டுள்ளன.

**முக்கிய குறிப்புகள்:**

வேளாண்மை செழிக்கவும் மானுடம் தழைக்கவும் சித்திரை திங்களில் நடத்தப்படும் விழா பொன்னேர் பூட்டுதல் இது தமிழரின் பண்பாட்டு மகுடம்.

**பாடலடிகள்**

கிழக்கு வெளுக்குது
பொழுதேறப் பொன்பரவும் ஏரடியில்
நல்லவேளையில் நாட்டுவோம் கொழுவை.

**13.மெய்க்கீர்த்தி – இரண்டாம் இராசராச சோழன்**

அரசர்கள் தங்கள் வரலாறும் பெருமையும் காலங்கடந்து நிற்க வேண்டும் என்பதற்காக தம்மைப்பற்றியும் தமது வீரம் கொடை போன்றவை குறித்து கல்லிலும் செப்பேடுகளிலும் எழுதினர். சோழர் காலத்தில் இது மெய்க்கீர்த்தி என்று அழைக்கப்பட்டது . கல் இலக்கியமாக மெய்க்கீர்த்திகள் விளங்குகிறது.

இரண்டாம் இராசராச சோழன் –கோப்பரகேசரி,திருபுவன சக்கரவர்த்தி என்ற பட்டம் பெற்றவர். இவருடைய மெய்க்கீர்த்திகள்–2 அதில் ஒன்று 91 வரிகளைக் கொண்டது அதில் 16–33 வரிகள் பாடப்பகுதியாக தமிழ் இணையக் கல்வி கழகத்திலிருந்து பெறப்பட்டது. கல்வெட்டின் முதல் பகுதியில் மன்னரை புகழ்ந்து இலக்கியநயம் பட எழுதப்படுவது மெய்க்கீர்த்தி எனப்படுகிறது. இது புலவர்களால் எழுதப்பட்டு கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்படும். முரண்

1.பிணிக்கப்படுவது–யானை (மக்களல்ல)
2. புலம்புவது –சிலம்பு (மக்களல்ல)
3.கலக்கமடைவது–ஓடைகள் (மக்களல்ல)
4.அடைத்து வைக்கப்பட்டிருப்பது– புனல் (மக்களல்ல)
5.வடுப்படுவது–மாங்காய்கள் (மக்களல்ல)
6.கொடிகள் உடையது –காடுகள் (மக்கள் கொடியவரல்லர்)
7. கள் உண்பது–வண்டுகள் (மக்களல்ல)
8.வெறுமையாய் இருப்பது–முங்கில்கள் (மக்களல்ல)
9.போராக எழுந்து நிற்பது–வயல்; நெற்கதிர்கள் (மக்களல்ல)
10.இருள் சூழ்ந்தது–மலைகள் (மக்களல்ல)
11.மருள்வது–மான்கள் (மக்களல்ல)
12 பிறழ்ந்து செல்வது–மீன்கள் (மக்களல்ல)
13சினம் காட்டுவது–செவிலித்தாய் (மக்களல்ல)
14.பொருள் மறைந்திருப்பது–புலவர்பாட்டில் (மக்களிடம் இல்லை)
15.தெருவில் ஆடுவது–இசைப்பாணர் (பிறரல்ல)

**14. சிலப்பதிகாரம்–இளங்கோவடிகள்**

ஐம்பெருங்காப்பியங்களுள் ஒன்று சிலப்பதிகாரம். இது முத்தமிழ்க்காப்பியம், குடிமக்கள்காப்பியம் என்றும் சிறப்பிக்கப்படுகிறது. முவேந்தர் பற்றிய செய்திகளைக் கூறுகிறது. மூன்று காண்டங்களைக் கொண்டது. முப்பது காதைகளை உடையது.

1.புகார்க் காண்டம்
2.மதுரைக் காண்டம்
3.வஞ்சிக்காண்டம்

இரட்டைக் காப்பியங்கள்: சிலப்பதிகாரமும், மணிமேகலையும்

இளங்கோவடிகள் சேர மரபைச் சார்ந்தவர். மணிமேகலையின் ஆசிரியர் சீத்தலைச் சாத்தனார், கோவலன் கண்ணகி கதையை சீத்தலைச் சாத்தனார் கூறி அடிகள் நீரே அருளுக என்றதால நாட்டுதும் யாம ஒர் பாட்டுடைச் செய்யுள் என இக்காப்பியம் படைத்தார். உரைப்பாட்டு மடை என்பது சிலப்பதிகாரத்தில் வரும் தமிழ்நடை. (உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்)

நெடுவேள்குன்றம் என்பது–சுருளி மலை
திருமால் குன்றம்– அழகர்மலை

ஐம்பெருங்காப்பியம் முறை வைப்பு:
1.சிந்தாமணி
2.சிலப்பதிகாரம்
3.மணிமேகலை
4.வளையாபதி
5.குண்டலகேசி –திருத்தணிகையுலா

**பாடப்பகுதி: இந்திரவிழா ஊரெடுத்த காதை (அடி –13–39)**

அருஞ்சொற்பொருள்: சுண்ணம்–நறுமணப்பொடி, காருகர்–நெய்பவர்(சாலியர்), துர்சு–பட்டு, துகிர்–பவளம், வெறுக்கை–செல்வம், நொடை–விலை, பாசவர்–வெற்றிலை விற்போர், ஓசுநர்–எண்ணெய் விற்போர், மண்ணுள் வினைஞர்–ஒவியர், மண்ணீட்டாளர்–சிற்பி, கிழி–துணி

**15. ஞானம்–தி.சொ.வேணுகோபாலன்**

தி.சொ.வேணுகோபாலன் திருவையாற்றில் பிறந்தவர். எழுத்து காலப் புதுக்கவிஞர்களில் ஒருவர். இவரின் நூல்கள் கோடைவயல், மீட்சி விண்ணப்பம். (கவிதை நூல்கள் )

**16. காலக்கணிதம் –கண்ணதாசன்**

கண்ணதாசன் இயற்பெயர் –முத்தையா, பிறந்த ஊர்: சிவகங்கை மாவட்டம் சிறுகூடல்பட்டி, பெற்றோர்– சாத்தப்பன், விசாலாட்சி, கண்ணதாசனின் முதல் பாடல்–

கலங்காதே மனமே (1949). இவரது சேரமான் காதலி என்ற புதினம் சாகித்திய அகாடமி விருது பெற்றது. தமிழக அரசின் அரசவைக் கவிஞராக இருந்தவர்.

**முக்கிய பாடலடிகள்:**

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன் .....

புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது...

பண்டோர் கம்பன் பாரதி தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்...

மாற்றம் என்பது மானிடத் தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அன்றோ..

நானே தொடக்கம் நானே முடிவு நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்

**17.சித்தாளு–நாகூர்ரூமி**

நாகூர்ரூமி என்பவரி;ன் இயற்பெயர் முகம்மதுரபி, தஞ்சைமாவட்டம், எண்பதுகளில் கணையாழி இதழில் எழுதத் தொடங்கியவர். மீட்சி, சுபமங்களா, புதியபார்வை, குங்குமம், கொல்லிப்பாவை, இலக்கிய வெளிவட்டம், குமுதம் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளிவந்துள்ளது.

இவர் இயற்றிய நூல்கள்: நதியின் கால்கள், ஏழாவது சுவை, சொல்லாத சொல், ஆகியவையாகும். (கவிதைத் தொகுதிகள்). இவரியற்றிய நாவல்: கப்பலுக்குப் போன மச்சான்.

**பாடலடிகள்:**

பொற்காலமாக இருந்தாலும்
இவள் தலையில் எழுதியதோ
கற்காலம் தான் எப்பொழுதும்...
…………………………..
சித்தாளின் மனச்சுமைகள்
செங்கற்கள் அறியாது.....

**18. தேம்பாவணி–வீரமாமுனிவர்**

தேம்பாவணி–தேம்பா+அணி,தேன்+பா+அணி. சூசையப்பரை (யோசோப்பு– வளன்) பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல் இது. இந்நூல் மூன்று காண்டங்களையும் 36 படலங்களையும் 3615 பாடல்களையும் கொண்டுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் வீரமாமுனிவர். இவரது இயற்பெயர் கான்ஸ்டான்ட் ஜோசப் பெஸ்கி. இவர் தனது பெயரை தைரியநாத சாமி என வைத்துக் கொண்டார். இவரியற்றிய நூல்கள் தமிழ் முதல் அகராதியான சதுரகராதி, தொன்னூல் விளக்கம் (இலக்கணம்), சிற்றிலக்கியங்கள், உரைநடை நூல்கள், பரமார்த்த குருகதைகள், மொழிபெயர்ப்பு நூல்கள் போன்றன.

முக்கியப் பாடலடிகள்:

இரும்புலை புண் போல் –உவமையணி, நுவமணி வடக்க யில்போல்– உவமையணி